

04.11.2026

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் தூய்மை எரிசக்தி உற்பத்தி திறன் 310 ஜிகா வாட்டாக அதிகரித்துள்ளதாக மத்திய புதுப்பிக்கதக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

2. உயர்கல்வி சேர்க்கைக்காக நடைபெறும் நீட் போன்ற தேர்வுகளுக்கு பதிலாக 12 ஆம் வகுப்பு மதிப்பெண்களை அடிப்படையாக கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

3. தீபாவளி பண்டிகைக்காக 15 ஆயிரத்து 659 சிறப்பு பேருந்துகள் நாளைமுதல் இயக்கப்படும் என மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. விஜய் தமிழன் பார்த்திபன் கூறியுள்ளார்.

4. தமிழக அரசு கூடுதல் விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்வதாக திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

5. ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கி அரையிறுதியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

****

பிரல்ஹாத் ஜோஷி

நாட்டில் புதை படிம எரிபொருள் அல்லாத எரிசக்தி உற்பத்தி திறன் 310 ஜிகா வாட்டாக அதிகரித்துள்ளதாக மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கதக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற எரிசக்தி உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், இதில் 172 ஜிகாவாட் சூரிய ஆற்றல் உற்பத்தி திறன் அடங்கும் என்றார்.

2014-ஆம் ஆண்டிற்கு முன்பு சூரிய ஆற்றல் உற்பத்தி திறன் சுமார் 3 ஜிகா வாட்டாக மட்டுமே இருந்ததாக கூறினார்.

நாடு முழுவதும் 104 இடங்களில் 65 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளில் மேற்கூரைகளில் சூரிய ஆற்றல் மின் உற்பத்தி அமைப்புகள் நிருவப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தூய்மையான புதுப்பிக்கதக்க எரிசக்தியை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் பொதுமக்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதையே இந்த முன்னேற்றம் எடுத்துரைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

****

பிரதாப் ராவ் ஜாதவ்

ஆரோக்கியமான வாழ்வை முதன்மையாக கொண்டு நோய் தடுக்கும் சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் முறையாக பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதார குடும்பநலத்துறை இணை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகள் சுகாதார கட்டமைப்பில் பொறுப்புடன் கூடிய பங்களிப்பை உறுதி செய்ய அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகள் அவசியம் என்றார்.

ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் போன்ற முன்னெடுப்புகள் சமூகத்தில் ஆயுர்வேதம் சார்ந்த

சுகாதார சேவைகள் மக்களை எளிதில் சென்றடைய உதவுவதாகவும், அவர் கூறினார்.

****

ரயில்வே

இந்திய ரயில்வே இதுவரை இல்லாத அளவாக கடந்த அக்டோபர் மாதத்தில் 145 மில்லியன் டன்னுக்கும் அதிகமான சரக்குகளை ஏற்றி சென்று சாதனை படைத்துள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 8 சதவிகிதத்திற்கும் அதிகமான வளர்ச்சியாகும்.

அதிக சரக்கு போக்குவரத்து, அதன்மூலம் கிடைத்த கூடுதல் வருவாய் ஆகியவை நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதையும், தளவாட துறையை வலுப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுவதாக அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.

அதேவேளையில் பயணிகள் போக்குவரத்திலும் சீரான வளர்ச்சி காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தாண்டு அக்டோபர் மாதத்தில் 64 கோடிக்கும் அதிகமான பயணிகள் இந்திய ரயில்வேயில் பயணம் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

****

விக்ரம் மிஸ்ரி

மத்திய வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி இரண்டு நாள் பயணமாக நேபாளம் சென்றடைந்தார்.

திரிபுவன் சர்வதேச விமான நிலையத்தில் நேபாளத்திற்கான இந்திய தூதர் மற்றும் மூத்த அதிகாரிகள் அவரை வரவேற்றனர்.

நேபாள வெளியுறவுத்துறை செயலர் அமிரத் பகதூர் ராயுடன் இருதரப்பு உறவுகள் குறித்து திரு.மிஸ்ரி கலந்துரையாடுகிறார்.

****

முதலமைச்சர் - நீட்

மருத்துவ படிப்புகள் மற்றும் பிற உயர்கல்வி படிப்புக்கான சேர்க்கையில் நீட் போன்ற தேர்வுகளை முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் தேர்வு சீர்திருத்தங்களுக்கான உயர்மட்ட பணிக்குழுவின் தலைவர் திரு. நந்தன் நிலேகனி தலைமையிலான குழுவினருடன் இன்று ஆலோசனை மேற்கொண்ட அவர், நீட் தேர்வை ரத்து செய்து, 12 ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் சேர்க்கை நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நீட் மற்றும் நீட் போன்ற தேர்வுகளை எதிர்த்து கடந்த ஆக்ஸ்ட் 11 ஆம் தேதி சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும், இந்த விவகாரத்தில் தமிழக அரசின் நிலைப்பாட்டையும் எடுத்துரைத்தார்.

முன்னதாக தமிழகத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், தொழிற்பேட்டைகள் மற்றும் பொது வசதி மையங்களை முதலமைச்சர் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இன்று திறந்துவைத்தார்.

சென்னையில் ஆயிரத்து 3 கோடி ரூபாய் செலவில் 643 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள்,

தர்மபுரி மாவட்டத்தில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய பட்டுக்கூடு அங்காடி வளாகம் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

மேலும் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 709 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

இதன்மூலம் சுமார் 85 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவர் என்றும் அரசுக்கு 603 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

****

விஜய் தமிழன் பார்த்திபன்

தீபாவளி பண்டிகையை ஒட்டி நாளைமுதல் வரும் 7 ஆம் தேதிவரை 15 ஆயிரத்து 659 சிறப்பு பேருந்துகள் சென்னையிலிருந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. விஜய் தமிழன் பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் திருவான்மியூர், அடையாறு, பூந்தமல்லி மறைமலைநகர் உள்ளிட்ட 16 இடங்களிலிருந்து இயக்கப்படும் என்று தெரிவித்தார்.

அனைத்து பேருந்துகளையும் கிளாம்பாகத்திலிருந்து இயக்கினால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

முன்பதிவு செய்யப்பட்ட பேருந்துகள் எங்கிருந்து இயக்கப்படும் என்பதை பொதுமக்கள் செயலி மூலம் அறிந்துகொள்ளலாம் என்றார்.

****

நிர்மல் குமார்

தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக்குழுக்களை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாநிலம் முழுவதும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு மூன்றாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்கப்படும் என்று கூறினார்.

****

<u>லோகேஷ்</u>

தமிழ்நாட்டில் வரி செலுத்துவோரின் குறைகளை களைய மாவட்ட அளவில் ஆட்சித்தலைவர்கள் தலைமையில் குழு அமைக்கப்படும் என்று மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு.லோகேஷ் தமிழ் செல்வன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் சரக்கு சேவை வரி மற்றும் பிற வரிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் இன்று பேசிய அவர், இக்குழுவில் அலுவல் சாரா உறுப்பினர்களாக சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் இடம்பெறுவார் என்று கூறியுள்ளார்.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாவட்ட அளவிலான விற்பனை வரி தொடர்பான விவாதம் நடத்தப்படும் என்றும், அவர் குறிப்பிட்டார்.

****

<u>மரியவில்சன்</u>

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தேவையான நிதியை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு.மரியவில்சன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சரக்கு சேவை வரி விதிப்பின் கீழ் வரம்பிற்குட்பட்டே தமிழக அரசின் கடன் சுமை இருப்பதாக குறிப்பிட்டார்.

****

அருண் ராஜ்

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் இரண்டாம் மண்டல பாசனத்திற்கான நீரை மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண் ராஜ் இன்று திறந்துவைத்தார்.

இன்றுமுதல் 60 நாட்களுக்கு திறக்கப்படும் தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

இந்த தண்ணீரின் மூலம் 94 ஆயிரத்து 201 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்றும் அவர் கூறினார்..

வாய்ஸ்

****

ஸ்டாலின்

தமிழ்நாட்டில் கூடுதல் விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில் ஒரு யூனிட் மின்சாரத்தை அண்டை மாநிலமான கேரளம் 14 ரூபாய் 50 பைசாவிற்கு வாங்கியுள்ள நிலையில் தமிழகத்தில் அந்த விலை ஏன் சாத்தியமில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விவகாரத்தில் சுதந்திரமான வெளிப்படைத்தன்மை கொண்ட ஆணையம் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

****

TNPSC

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் 4 தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நாளையுடன் நிறைவடைகிறது.

கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், சுருக்கெழுத்து, தட்டெச்சர் உள்ளிட்ட ஆறாயிரத்து 574 காலி பணியிடங்களுக்கு இதுவரை 9 லட்சத்து 80 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கான எழுத்து தேர்வு வரும் ஜனவரி 10 ஆம் தேதி நடைபெற உள்ளது.

****

இருவரி

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருநங்கையர்களுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சித்தலைவர் திருமதி சினேகா தலைமையில் இன்று நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் நாளை நடைபெற உள்ளன.

ஓட்டப்பந்தயம், குண்டு எரிதல், நீளம் தாண்டுதல், பந்து எரிதல், கிரிக்கெட் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

****

தீபாவளி – S.P

தீபாவளி பண்டிகையை பொதுமக்கள் அச்சமின்றி கொண்டாடும் வகையில் தஞ்சாவூர் கும்பகோணம் பட்டுக்கோட்டை ஆகிய 3 நகரங்களில் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

****

நெல்லை பட்டாசு

நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் தீ விபத்து தடுப்பு செயல் விளக்கம் இன்று அளிக்கப்பட்டது.

தீயணைப்புத்துறை அதிகாரிகள் பங்கேற்று பட்டாசுகளை பாதுகாப்பாக வெடிப்பது குறித்து எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

****

பழனி

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் இரண்டு வாரங்களுக்கு பின்னர் ரோப்கார் சேவை இன்று மீண்டும் தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

****

வானிலை

தென் தமிழகம் மற்றும் லட்ச தீவு பகுதிகளின் மேல் வளிமண்டல சுழற்சி நிலவுவதன் காரணமாக நீலகிரி கோவை ராமநாதபுரம் புதுக்கோட்டை சிவகங்கை தஞ்சாவூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் மிதமான மழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

****

ஹாக்கி

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கி அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் நடைபெறும் இப்போட்டிகளில்

இந்தியா - தென்கொரியாவையும்,

ஜப்பான் - மலேசியாவையும் எதிர்கொள்கின்றன.

****